

திருவண்ணாமலை முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர், மாவட்ட அவைத்தலைவர் த.வேணுகோபால் அவர்களின் மறைவிற்கு கழகத் துணைப் பொதுச்செயலாளர் முனைவர் க.பொன்முடி அவர்கள் அஞ்சலி செலுத்தி அவரைப் பிரிந்து வாடும் குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறினார். சட்டபேரவை துணை தலைவர் கு.பிச்சாண்டி, விழுப்புரம் தெற்கு மாவட்டச் செயலாளர் நா.புகழேந்தி எம்.எல்.ஏ, செங்கம் சட்டமன்ற உறுப்பினர் மு.பெ.கிரி, மாவட்ட பொருளாளர் இரா.ஜனகராஜ், மாவட்ட ஊராட்சி குழு துணை தலைவர் மு.தங்கம் மற்றும் கழக நிர்வாகிகள் பலர் அஞ்சலி செலுத்தினர்.



மறைந்த திருவண்ணாமலை நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் த.வேணுகோபால் அவர்களின் உடலுக்கு, பொதுப் பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு மாலை அணிவித்து, மரியாதை செலுத்தினார். உடன் டாக்டர் எ.வ.வே.கம்பன், சி.என். அண்ணாதுரை எம்.பி, இரா.ஸ்ரீதரன், எஸ்.பன்னீர்செல்வம், ப்ரியா விஜயரங்கன், ப.கார்த்திவேல்மாறன், கோ.கண்ணன், நிர்மலா வேல்மாறன் உட்பட பலர் உள்ளனர்.

### அன்னைத் தமிழ் காக்கும் அனைத்துப் போராட்டங்களிலும் முன்னின்ற

# ஆற்றல் மிகு செயல்வீரர் வேணுகோபால்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!



சென்னை, பிப். 17–

"அன்னைத் தமிழ் காக்கும் அனைத்துப் போராட்டங்களிலும் முன்னின்ற ஆற்றல்மிகு செயல்வீரர் த.வேணுகோபால் அவர்கள்" என்று அவரது மறைவு குறித்து விடுத்துள்ள இரங்கல் செய்தியில் முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் கூறியுள்ளார்.

இது குறித்து முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் விடுத்துள்ள இரங்கல் செய்தி வருமாறு:-

தாய்த்தமிழைக் காக்கும் போரில் தன்னை ஈடுபடுத்திக் கொண்ட மொழிப்போர் தியாகி வேணுகோபால் அவர்கள் மறைந்தார் என்ற செய்தியறிந்து மிகுந்த வருத்தமுற்றேன்.

இன - மான - மொழியுணர்வோடு திராவிட இயக்கப் பட்டறையில் வார்ப்பிக்கப்பட்ட கொள்கை தீரரான வேணுகோபால் அவர்கள் இரண்டு முறை சட்டமன்ற உறுப்பினராகவும் - ஐந்து முறை நாடாளுமன்ற உறுப்பினராகவும் மக்கள் பணியாற்றியவர். 2009-ஆம் ஆண்டு நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் தமிழ்நாட்டிலேயே அதிக வாக்கு வித்தியாசத்தில் வெற்றி பெற்ற பெருமைக்குரியவர்.

வேணுகோபால் அவர்கள் 40 ஆண்டுகள் மாவட்ட அவைத்தலைவராக இருந்தவர். 2019-ஆம் ஆண்டு திருவண்ணாமலையில் நடைபெற்ற கழக முப்பெரும் விழாவில் தந்தை பெரியார் விருதை அவருக்கு வழங்கி மகிழ்ந்த தருணத்தைத் தற்போது எண்ணிப் பார்த்து நெகிழ்கிறேன்.

அன்னைத் தமிழ் காக்கும் அனைத்துப் போராட்டங்களிலும் முன்னின்ற ஆற்றல்மிகு செயல்வீரரான, அனைவரது நன்மதிப்பைப் பெற்ற மக்கள் தொண்டரான வேணுகோபால் அவர்களின் மறைவு கழகத்துக்கும் திருவண்ணாமலை மக்களுக்கும் பேரிழப்பாகும்.

அவரை இழந்து வாடும் குடும்பத்தினருக்கும், கழக உடன்பிறப்புகளுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தமது இரங்கல் செய்தியில் கூறியுள்ளார்.

### திருவண்ணாமலை நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர்

# மொழிப்போர்த் தியாகி த.வேணுகோபால் மறைவு!

திருவண்ணாமலை, பிப்.17

திருவண்ணாமலை மாவட்டக் கழக அவைத் தலைவராக 40 ஆண்டு காலமாக செயல்பட்டு வந்த, கழகத்தின் மூத்த முன்னோடி, நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர், மொழிப்போர் தியாகி த.வேணுகோபால் (வயது 88) நேற்று முன்தினம் பகல் 2.30 மணியளவில் இயற்கை எய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.

அவருக்கு 2 மகள்கள் உள்ளனர். மறைந்த த.வேணுகோபால் அவர்கள் 2 முறை சட்டமன்ற உறுப்பினராகவும், 5 முறை நாடாளுமன்ற உறுப்பினராகவும், ஒரு முறை ஒன்றியக் குழுத் தலைவராகவும் பணியாற்றியுள்ளார்.

கழகம் நடத்திய அத்தனை போராட்டங்களிலும் பங்கேற்று சிறை சென்றுள்ளார். 2009-ல் நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் தமிழ்நாட்டிலேயே அதிக வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்று முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பாராட்டைப் பெற்றவர் மறைந்த த.வேணுகோபால்.

கழகத் தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களால் பெரியார் விருது பெற்ற அவர், திருப்பத்தூர், திருவண்ணாமலை மாவட்டக் கழகத்தினருடன் நெருங்கி பழகி வந்தவர். சில நாட்கள் உடல்நலிவுற்றிருந்த நிலையில் பிற்பகல் 2 மணியளவில் இயற்கை எய்தினார்.

தகவலறிந்து அமைச்சர் எ.வ.வேலு, சட்டப்பேரவை துணைத் தலைவர் கு.பிச்சாண்டி, மாவட்டக் கழக நிர்வாகிகள் சி.என்.அண்ணாதுரை எம்.பி., சரவணன், மு.பெ.கி. அம்பேத்குமார் இரா.ஸ்ரீதரன், டாக்டர் எ.வ.வே.கம்பன், பிரியா விஜயரங்கன், பன்னீர் செல்வம், கார்த்திக் வேல்மாறன், அருணை வெங்கட், மாவட்ட ஆட்சியர் பாஸ்கர பாண்டியன் உள்ளிட்ட மாவட்டக் கழக நிர்வாகிகள் ஏராளமானோர் காட்டாம்பூண்டியில் உள்ள அவரது இல்லத்திற்குச் சென்று தங்களது இறுதி அஞ்சலியை செலுத்தினர்.

மறைந்த த.வேணுகோபால் அவர்களின் இறுதி ஊர்வலம் நேற்று பகல் 1 மணியளவில் நடைபெற்றது.

### திருவண்ணாமலை நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் - மொழிப்போர் தியாகி

# த.வேணுகோபால் மறைவு! 3 நாட்கள் கழக நிகழ்ச்சிகள் ரத்து!

## அமைச்சர் எ.வ.வேலு அறிக்கை!

திருவண்ணாமலை, பிப். 17 -

திருவண்ணாமலை தெற்கு மாவட்ட தி.மு.க. அவைத்தலைவரும், நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினருமான த.வேணுகோபால் அவர்கள் இயற்கை எய்தினார். திருவண்ணாமலை மாவட்டத்தில் மூன்று நாட்களுக்கு கழக நிகழ்ச்சிகள் அனைத்தும் ரத்து செய்யப்படுகிறது என பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு அறிக்கை விடுத்துள்ளார்.

இது குறித்து பொதுப் பணித்துறை அமைச்சரும், கழக உயர்நிலை செயல் திட்டக்குழு உறுப்பினருமான எ.வ.வேலு விடுத்த அறிக்கையில் கூறியிருப்பதாவது:

திருவண்ணாமலை தெற்கு மாவட்ட தி.மு.க. அவைத்தலைவரும், நாடாளுமன்ற, சட்டமன்ற முன்னாள் உறுப்பினரும், கழக முப்பெரும் விழாவில் கழகத்தலைவர் மு.க. ஸ்டாலின் அவர்களால் தந்தை பெரியார் விருது பெற்றவருமான கழகத்தின் மூத்த முன்னோடி யுமான த.வேணுகோபால் அவர்கள் உடல் நலம் குன்றியும், முதுமையின் காரணமாக நம்மை விட்டு பிரிந்து விட்டார்.

த.வேணுகோபால் மறைவையொட்டி திருவண்ணாமலை மாவட்டத்தில் பிப்ரவரி 15, 16, 17 ஆகிய மூன்றுநாட்கள் அனைத்து கழக நிகழ்ச்சி களும் ரத்து செய்யப்படுகிறது. கழக கொடி கம்பங்களில் கொடியினை அரைக்கம்பத்தில் பறக்க விட கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

### சா.பீட்டர் அல்போன்ஸ் - இறையன்பன் குத்தூஸ் தலைமை! துறைமுகம் காஜா - டாக்டர் அ.சுபேர்கான் முன்னிலை -

# சமய நல்லிணக்கப் பேரவை சார்பில் கருத்தரங்கம்!

## அமைச்சர்கள் பி.கே.சேகர்பாபு - செஞ்சி மஸ்தான் மற்றும் பேராசிரியர் காதர் மொகிதீன், தயாநிதிமாறன் சிறப்புரை!

சென்னை, பிப்.17

சமய நல்லிணக்கப் பேரவை சார்பில் 'மதவெறி மாளட்டும் - மனிதநேயம் ஆளட்டும்' என்ற தலைப்பில் மாபெரும் கருத்தரங்கம் இன்று (17.2.2024) மாலை 4 மணிக்கு, எழும்பூர் இரெயில் நிலையம் எதிரில் உள்ள இம்பீரியல் பைஜ் மகாலில் நடைபெறுகின்றது.

கருத்தரங்கிற்கு தமிழ்நாடு சிறுபான்மையினர் ஆணையத் தலைவர் சா.பீட்டர் அல்போன்ஸ், தமிழ்நாடு மாநில சிறுபான்மையினர் ஆணையத் துணைத் தலைவர் இறையன்பன் குத்தூஸ் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

பிற்படுத்தப்பட்டோர் நல வாரியத் தலைவர் துறைமுகம் காஜா, கழக சிறுபான்மை நல உரிமைப் பிரிவு செயலாளர் டாக்டர் அ.சுபேர்கான், இந்திய யூனியன் முஸ்லிம் லீக் தேசிய தலைவி பாத்திமா முஸப்பர், எழும்பூர் பகுதி தென்றல் நிசார் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

மயிலாடுதுறை மாவட்ட சிறுபான்மை நல உரிமை பிரிவு துணை அமைப்பாளர் அகமது ஷாவலியுல்லா வரவேற்றுப் பேசுகின்றனர்.

இக்கருத்தரங்கில் அமைச்சர் பி.கே.சேகர்பாபு, அமைச்சர் செஞ்சி மஸ்தான், இந்திய யூனியன் முஸ்லீம் லீக் தேசிய தலைவர் கே.எம்.காதர் மொகிதீன், தயாநிதிமாறன் எம்.பி., எம்.எம். அப்துல்லா எம்.பி., எம்.எச். ஜவாஹிருல்லா எம்.எல்.ஏ., எம்.அதுல் ரகுமான், இ.பரந்தாமன் எம்.எல்.ஏ., ஷாநவாஸ் எம்.எல்.ஏ., எம்.ஷத்துதீன் பாகவி, ருமைஸ் பைஜி, எம்.எஸ்.பஷீர் அகமது, பெரோஸ் கான், வி.சுதாகர், எம்.ஆர்.டி. ரகுமான், இ.மொய்தீன் மற்றும் பலர் கலந்துகொண்டு சிறப்புரையாற்றுகின்றனர்.

ஏ.எம்.ஜெய்தூன் நன்றி கூறுகிறார்.

### நாட்டில் உள்ள பல

# யூ டியூப் சேனல்களைத் தடுப்பதற்கான காரணங்கள் என்ன?

## கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் எம்.பி. கேள்வி



நாமக்கல், பிப்.17 -

நாட்டில் உள்ள பல யூடியூப் சேனல்களைத் தடுப்பதற்கான காரணங்கள் என்ன? என மாநிலங்களவையில் நாமக்கல் மாவட்டச் செயலாளரும், கழக உறுப்பினருமான கே.ஆர்.என். இராஜேஸ்குமார் கேள்வி எழுப்பியுள்ளார்.

அவரது கேள்வியில் ஒன்றிய அரசு, நாட்டில் உள்ள பல யூடியூப் சேனல்களை முடக்கியுள்ளதா? பொய்யான தகவல்களைப் பரப்பியதால் சேனல்கள் தடுக்கப்பட்டுள்ளதா? அப்படியானால், இந்த சேனல்களைத் தடுக்க அரசாங்கத்தைத் தூண்டிய சம்பவங்கள் என்ன? அதற்கான காரணங்களை விளக்க வேண்டும் என கேள்வி எழுப்பினார்.

இதற்கு பதிலளித்து பேசிய தகவல் மற்றும் ஒளி பரப்புத் துறை அமைச்சர் மற்றும் இளைஞர் விவகாரங்கள் மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சர் அனுராக் சிங் தாக்கூர், தகவல் தொழில்நுட்பச் சட்டத்தின் கீழ் தகவல் தொழில்நுட்ப (இடைநிலை வழிகாட்டுதல்கள் மற்றும் டிஜிட்டல் மீடியா நெறிமுறைகள் குறியீடு) விதி, 2021 (ஐடி விதிகள், 2021) அரசாங்கம் அறிவித்துள்ளது. டிஜிட்டல் மீடியாவில் செய்திகள் மற்றும் நடப்பு விவகாரங்களை வெளியிடுபவர்கள் ஆன்லைன் தொகுக்கப்பட்ட உள்ளடக்கத்தை (OTT இயங்குதளங்கள்) வெளியிடுபவர்கள், அதற்கான குறியீட்டை மீறுவது தொடர்பான குறைகளை நிவர்த்தி செய்வதற்கான மூன்று அடுக்கு குறைகளை நிவர்த்தி செய்யும் வழிமுறைகள் வழங்கப்பட்டுள்ளன.

தகவல் மற்றும் ஒளிபரப்பு அமைச்சகம், டிசம்பர், 2021 முதல், இறையாண்மை மற்றும் ஒருமைப்பாட்டின் நலனுக்காக, இல்லாத ஒன்றை வெளியிடுவதை தடுக்கும் வகையில், 2021 ஆம் ஆண்டு ஐடி விதிகளின் பகுதிIII இன் விதிகளின் கீழ், 125 யூடியூப் சார்ந்த செய்தி சேனல்களை பொது அணுகலில் இருந்து தடுப்பதற்கான வழிமுறைகளை வெளியிட்டுள்ளது. இது இந்தியாவில் உள்ள அனைத்து மாநிலத்தின் பாதுகாப்பு மற்றும் மாநிலங்களுடனான நட்புறவு அடிப்படையில் தகவல் பிரிவு 69 A இன் விதிகளின் படி, போலியான செய்திகள் மற்றும் அது தொடர்பான எந்தவொரு அறியத்தக்க குற்றத்தையும் தூண்டுவதைத் தடுப்பதற்காக தொழில்நுட்ப சட்டம், 2000 இயற்றப்பட்டு, அதன் மூலம் யூடியூப் சேனல்கள் தடுக்கப்பட்டுள்ளது என்றார்.

### தமிழ்நாட்டிலேயே பெரிய தாலுகாவாக இருக்கிற

# பொன்னேரி வட்டத்தைப் பிரித்து புது வட்டம் உருவாக்கிடுவீர்!

## சட்டப் பேரவையில் எஸ்.சுதர்சனம் கோரிக்கை!



சென்னை, பிப். 17-

சட்டப்பேரவையில் கேள்வி நேரத்தின்போது நடைபெற்ற விவரம் வருமாறு:-

**எஸ்.சுதர்சனம்:** என்னுடைய தொகுதியை உள்ளடக்கிய பொன்னேரி வட்டத்திற்கு 9 பிர்காக்கள் இருக்கின்றன. 675 சதுர கிலோ மீட்டர் பரப்பளவு கொண்டு அந்த வட்டம் சுமார் 4 இலட்சம் மக்களைக் கொண்டதாக விளங்குகிறது. பெருவெள்ளம் வந்த இந்தக் காலத்திலே அங்குள்ள வருவாய்த் துறை அலுவலர்கள், பணிச்சுமையின் காரணமாக மிகவும் சிரமப்பட்டார்கள். பல வருடங்களாக, அந்த வட்டம் பிரிக்கப்பட வேண்டுமென்று நான் கோரிக்கை வைத்து வருகின்றேன். 13.4.2022 அன்றுகூட சட்டமன்றத்தில் இதுசம்பந்தமாக நான் அரசின் கவனத்தை ஈர்த்திருக்கின்றேன். தமிழ்நாட்டிலேயே பெரிய தாலுகாவாக இருப்பதால், தயவுசெய்து 9 பிர்காக்களைக் கொண்ட அந்தத் தாலுகாவைப் பிரித்து தர அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்று அறிய விரும்புகின்றேன்.

**அமைச்சர் கே.கே.எஸ்.எஸ். ஆர்.இராமச்சந்திரன்:** நம்முடைய இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்களின் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் கூட, இந்தக் கோரிக்கையை வலியுறுத்திச் சொன்னார்கள். இது பெரிய வட்டமாக இருக்கிறது என்பது அரசாங்கத்தின் கவனத்தில் இருக்கிறது. எதிர்காலத்தில் வட்டங்கள் பிரிக்கின்ற நேரத்தில், இந்த வட்டத்திற்கு முன்னுரிமை வழங்கப்படும்.

இவ்வாறு அமைச்சர் பதிலளித்தார்.



கழக இளைஞர் அணிச் செயலாளரும் அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று கழக இலக்கிய அணி மாநில இணைச் செயலாளர் மறைந்த கயல் தினகரன் அவர்களின் உடலுக்கு மலரஞ்சலி செலுத்தினார். உடன் அமைச்சர் மா.சுப்பிரமணியன், சட்டமன்ற உறுப்பினர்கள் ப.தாயகம்கவி, ஏ.எம்.வி.பிரபாகர்ராஜா, தலைமைச் செயற்குழு உறுப்பினர் க.தனசேகரன், முரசொலி செய்தியாசிரியர் கு.சேது ஆகியோர் உள்ளனர்.



முத்தமிழறிஞர் தமிழின தலைவர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழா மற்றும் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதிஸ்டாலின் பிறந்தநாளை முன்னிட்டும் கடலூர் மேற்கு மாவட்ட தி.மு.க. விளையாட்டு மேம்பாட்டு அணி சார்பில் நடைபெற்ற தென்னிந்திய அளவிலான ஆண்கள் மற்றும் பெண்கள் கபடி போட்டியில் வெற்றி பெற்ற வீரர்களுக்கு தொழிலாளர் நலன்திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் சி.வெ.கணேசன் பரிசுகளை வழங்கினார். உடன் நெய்வேலி சட்டமன்ற உறுப்பினர் சபா. இராசேந்திரன், மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர் சி.வெ.க.வெங்கடேசன் மற்றும் மாவட்ட துணை அமைப்பாளர்கள், மாவட்ட பொருளாளர் க. தண்டபாணி, விருத்தாசலம் தெற்கு ஒன்றிய செயலாளர் தி. வேல்முருகன் ஆகியோர் உள்ளனர்.